சார்பு நீதிமன்றம், விருதுநகர்

O.S.No: 49/2022 Date: 07.11.2024

வாதி தரப்பு சாட்சி–2(Pw2) ன் வாக்குமூலம் (1872 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144 வது பிரிவின்படி திருமதி.K.சேர்மக்கனி, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாதவன் | சாதி | : | –– |
| த/பெ | : | குருசாமி | சமயம் | : | |
| கிராமம் | : | சாட்சியாபுரம் | தொழில் | : | |
| தாலுகா | : | சிவகாசி | வயது | : | 66 |

<u>முதல் விசாரணை–</u>

இவ்வழக்கின் வாதியை அவரது கணவர் மூலமாக தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை என் சாட்சியத்தின் ஒரு பகுதியாக வாசித்துக்கொள்ள வேண்டுகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள எழுதியதும், சாட்சியும் என்ற இடத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மற்றொரு சாட்சி கையெழுத்து பிரதிவாதியின் கணவருடையது கையெழுத்தாகும். புரோநோட்டில் பின்பக்கத்தில் 21.01.2020 ம் தேதியன்று பிரதிவாதி ரூ.10,000/– வாதி வசம் செலுத்தியதற்கு மேற்குறிப்பு செய்து அதில் நான் 1 வது சாட்சியாக கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள 2 வது சாட்சிய கையெழுத்து பிரதிவாதியின் கணவருடையது. புரோநோட்டில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் முறையே **வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6** ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.